**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாடிப்பட்டி,**
முன்னிலை: **திரு. க. செல்லையா. B.A., B.L., L.L..M., Dip.,J.J.J.P.sy.,**
நீதித்துறை நடுவர், வாடிப்பட்டி
[CNR No. TNMDIE-006537-2023]
**பட்டியல் வழக்கு எண்.533/2023**
**2025-ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 30-ஆம் நாள் புதன் கிழமை**
2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் ஆடி திங்கள் 14-ஆம் நாள்
----

**அரசுக்காக, சார்பு ஆய்வாளர்,**
**பாலமேடு காவல்நிலையம்**
(பாலமேடு காவல்நிலைய குற்ற எண்.122/2023
இதச, 1860, சட்டப்பிரிவுகள் 341. 294(ஆ),323,506(1)- இன் கீழ்) ... குற்ற முறையீட்டாளர்

//எதிர்//

**மக்கனாட்சி.(50/2023)**
**த.பெ. பூஞ்சோலை,**
கீழச்சின்னனம்பட்டி, பாலமேடு,
வாடிப்பட்டி வட்டம்,
மதுரை மாவட்டம். .... குற்றச்சாட்டப்பட்டவர்கள்

இவ்வழக்கு, 02.08.2023 அன்று இந்நீதிமன்றத்தால் புலன்கொள்ளப்பட்டு, பட்டியல் வழக்கு எண் 533/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று, 30.07.2025 ஆம் நாள் இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் **கற்றறிந்த அரசு வழக்கு நடத்துநர் நிலை-1 திரு..K.S இராமசாமி M.A., B.L** அவர்கள் ஆஜராகியும்; குற்றச்சாட்டப்பட்டவர் தரப்பில் **கற்றறிந்த வழக்குரைஞர் திரு.M.தியாகராஜன் B.A.,B..L,** அவர்கள் ஆஜராகியும்; இருதரப்பு வாதுரைகள் கேட்டறிந்தும், இதுநாள் வரை முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் கவனமாக பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்....

**/ தீர்ப்புரை /**

1. இவ்வழக்கு, அரசுக்காக, பாலமேடு காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் இந்நீதிமன்றத்தில் குவிமுச, 1973 சட்டப்பிரிவு 173 உ/இ 170-இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கையின் மேலெழுகின்றது.

**இறுதி அறிக்கையின் சாராம்சம்:**

2. கடந்த 17.06.2023ஆம் தேதி மதியம் 01.00 மணியளவில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர்/ப.சா.1 சுரேஷ் அவருக்கு சொந்தமான TN 59 CE 8012 பதிவெண் கொண்ட தானியில் (ஆட்டோவில்) பயணிகளை ஏற்றிக்கொண்டு, அலங்காநல்லூர் வழி பாலமேடு சாலையில் உள்ள தேவசேரி பிரிவு அருகே வந்து கொண்டிருந்தபொழுது, குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சி, TN 59 BQ 1752 என்ற பதிவெண் கொண்ட தானியை (ஆட்டோவை) ஓட்டி வந்து, ப.சா.1 சுரேஷின் தானியை வழியடைத்து நின்று, 'ஏண்டா தேவிடியா மகனே அவுசாரி மகனே' என்று அவரும் மற்றவர்களும் தொல்லையுற ஆபாச வார்த்தைகளால் பேசி, ப.சா.1 சுரேஷின் சட்டையை பிடித்து, 'நீ எப்படிடா பாலமேடு போகும் ஆட்களை ஏத்தலாம்' என்று கூறி, தனது கையால் ப.சா.1 சுரேஷின் கன்னத்தில் மாறி மாறி அடித்து, காலால் எட்டி உதைத்து அவருக்கு சாதாரண காயத்தை ஏற்படுத்தி, 'இனிமேல் நீ பாலமேடு போகும் சவாரிகளை ஏற்றினால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன்' என்று குற்றமுறு கொலைமிரட்டல் விடுத்து, அவ்வகையில், இதச 1860 சட்டப்பிரிவுகள் 341, 294(ஆ),323 மற்றும் 506(1)இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களை புரிந்துள்ளார் என குற்றமுறையீட்டாளரான அரசுக்காக, சமயநல்லூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் தரப்பில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இதச, 1860, சட்டப்பிரிவுகள் 341, 294(ஆ),323,506(1) இன் கீழ் வழக்கு முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதியதால், இவ்வழக்கு குற்றங்கள் புலன்கொள்ளப்பட்டு பட்டியல் வழக்கு எண் 533/2023 வழங்கப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4. குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சி அழைப்பாணையின் பெயரில் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாக அவருக்கு, குவிமுச, 1973 சட்டப்பிரிவு 207 இன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக

வழங்கப்பட்டது. அவர்கள் படித்துப் பார்க்க அவர்களுக்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்டது.

5. இவ்வழக்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சி இதச, 1860, சட்டப்பிரிவுகள் 342,294(ஆ),323,506(2)–இன் கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றங்கள் பொருத்து பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் 2023 சட்டப்பிரிவு 263–இன் கீழ் குற்றங்கள் குறித்து குற்றச்சாட்டு வனையப்பட்டு தமிழில் வாசித்து காண்பித்து விளக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் தம்மீது வனையப்பட்ட மேற்படி குற்றச்சாட்டுகளை மறுத்தார். எனவே, வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

6. அரசு தரப்பில் அ.சா. 1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.1 சுரேஷ், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சி; அ.சா.2 சார்பு ஆய்வாளர் மலைசாமி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட புலன்விசாரணை மேற்கொண்ட பொறுப்பு அலுவலரும், முதற்கட்ட புலன்விசாரணை அதிகாரியுமான பசா 9 சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜா முகமது மற்றும் மேற்கட்ட புலன்விசாரணை மேற்கொண்ட மேற்கட்டபுலன்விசாரணை அதிகாரி ப.சா.10 சார்பு ஆய்வாளர் அண்ணாதுரை ஆகியோர் சார்பாக அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட ஆவணசார் சாட்சி ஆனவர். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் காட்சிப்படுத்தப்பட்டது. அரசுத்தரப்பில் சான்று பொருள்கள் எதுவும் காட்சிப்படுத்தப்படவில்லை.

**<u>அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

7. அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பாக மாலை சுமார் 06.00 மணியளவில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1 சுரேஷ் அலங்காநல்லூர் தானி நிலையத்தில் (ஆட்டோ ஸ்டாண்டில்) இருந்தபொழுது, அவருக்கும் குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சிக்கும் வாய்தகராறு ஆனது. அ.சா.ஆ.3 புகாரில் என்ன விவரங்கள்

கண்டுள்ளது என்பது அறியாமல் அ.சா.ஆ.1 நிகழ்நிலை புகார்தாரர் கையொப்பம் மட்டும் இட்டார்.

8. கடந்த 17.06.2023–ஆம் நாள் மாலை 07.30 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் ப.சா.9 ராஜாமுகமது பாலமேடு காவல்நிலையத்தில் பொறுப்பு அலுவலில் இருந்த போது, அசா 1 சுரேஷ் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று பாலமேடு காவல் நிலைய குற்ற எண்.122/2023 இதச, 1860 சட்டப்பிரிவுகள் 341, 294(ஆ), 323, 506(i) இன் கீழாக அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தார். பின்னர் வழக்கு கோப்பினை அன்னார் தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றையதினம் இரவு சுமார் 09.00 மணியளவில் சம்பவ இடத்திற்குச் சென்று சாட்சிகள் பசா 4 நீதியரசன் மற்றும் பசா 5 கோட்டைச்சாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்து, மேற்படி சாட்சிகள் இருவரையும் விசாரித்து அவர்களின் விசாரணை வாக்குமூலங்களையும் தனித்தனியே பதிவு செய்தார். சாட்சிகள் அ.சா.1 சுரேஷ், ப.சா.2 பாலாஜி, ப.சா.3 மணிகண்டன் ப.சா.4 மணிமேகலை ஆகியோரை விசாரித்து அவர்களின் விசாரணை வாக்குமூலங்களையும் தனித்தனியே பதிவு செய்தார். குற்றம்சாட்டப்பட்டவரை தேடி வந்தநிலையில், இவ்வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சி மாண்புமிகு முதன்மை அமர்வு நீதிமன்ற முன்பிணையில் சென்றுவிட்டதால் கைது செய்யவில்லை.

9. இதற்கிடையே 12.07.2023–ஆம் நாள் சார்பு ஆய்வாளர் ப.சா.7 சரவணக்குமார் முதல்நிலை காவலர் 1893, ப.சா.8 முரளிகிருஷ்ணன் முதல்நிலை காவலர் 805 ஆகியோர் ரோந்து சென்றபொழுது, போலிஸ் பார்ட்டியை கண்டவுடன் தேவசேரி பிரிவில் விட்டு சென்ற TN 59 CQ 1752 என்ற பதிவெண் கொண்ட தானியை சாட்சிகள் ப.சா.7 சரவணக்குமார் முதல்நிலை காவலர் 1893, ப.சா.8 முரளிகிருஷ்ணன் முதல்நிலை காவலர் 805 ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றி, வழக்கு சொத்தை அ.சா.ஆ.7 படிவம் 91 இன் மூலம் நீதிமன்றத்திற்கும் அனுப்பி வைத்தார். அதன் பிறகு ப.சா.9 ராஜாமுகமது

பணிமாறுதலில் செல்லும் சமயத்தில் ப.சா.10 சார்பு ஆய்வாளர் அண்ணாதுரை வசம் வழக்கு கோப்பை ஒப்படைத்தார்.

10. வழக்கு கோப்பை ப.சா.10 சார்பு ஆய்வாளர் அண்ணாதுரை தனது தொடர் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு தனது தொடர் புலன்விசாரணையை முடித்து குற்றம்சாட்டப்பட்டவர் மக்கனாட்சி மீது இதச, 1860 சட்டப்பிரிவுகள் 341, 294(ஆ), 323, 506(i) இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களை சாட்டி இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

11. அரசு தரப்பு தனது சாட்சியத்தை அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோருடன் நிறுத்திக்கொண்டதால், அரசு தரப்பு சாட்சியம் முற்று செய்யப் பெற்றது. மேற்கண்ட வழக்கு விசாரணையில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இவ்வழக்கு குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றமுறுத்தும் சாட்சிய விவரங்களை தொகுத்து அன்னாரிடம் பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் 2023 சட்டப்பிரிவு 351(1)(ஆ)–இன்படி வினவியபோது, அன்னார், மேற்படியாக குற்றமுறுத்தும் சாட்சியங்களையும், வழக்கினையும் மறுத்தார். இவ்வழக்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை. எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சியம் முற்று செய்யப்பெற்றது. இருதரப்பு வாத பிரதிவாதங்களும் பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் 2023 சட்டப்பிரிவு 352–இன் கீழ் கவனமுற கேட்கப்பட்டது.

**<u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:</u>**

12. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், **அரசு தரப்பில், குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சி அவர் மீது வனையப்பட்ட இதச, 1860, சட்டப்பிரிவுகள் 342, 294(ஆ),323,506(2)இன் கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றங்களை புரிந்துள்ளார் என்பது அறிவிற்கு ஏற்புடைய ஐயப்பாடுகள் அனைத்திற்கும் அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?** என்பதே ஆகும்.

**தீர்வும், அதன் காரணமும், கலந்தாய்வும்:**

13. அரசு தரப்பு குற்றச்சாட்டு யாதெனில், கடந்த 17.06.2023–ஆம் தேதி மதியம் 01.00 மணியளவில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1 சுரேஷ் அவருக்கு சொந்தமான TN 59 CE 8012 பதிவெண் கொண்ட தானியில் (ஆட்டோவில்) பயணிகளை ஏற்றிக்கொண்டு, அலங்காநல்லூர் வழி பாலமேடு சாலையில் உள்ள தேவசேரி பிரிவு அருகே வந்து கொண்டிருந்தபொழுது, குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சி, TN 59 BQ 1752 என்ற பதிவெண் கொண்ட தானியை (ஆட்டோவை) ஓட்டி வந்து, ப.சா.1 சுரேஷின் தானியை வழியடைத்து நின்று, 'ஏண்டா தேவிடியா மகனே அவுசாரி மகனே' என்று அவரும் மற்றவர்களும் தொல்லையுற ஆபாச வார்த்தைகளால் பேசி, ப.சா.1 சுரேஷின் சட்டையை பிடித்து, 'நீ எப்படிடா பாலமேடு போகும் ஆட்களை ஏத்தலாம்' என்று கூறி, தனது கையால் ப.சா.1 சுரேஷின் கன்னத்தில் மாறி மாறி அடித்து, காலால் எட்டி உதைத்து அவருக்கு சாதாரண காயத்தை ஏற்படுத்தி, 'இனிமேல் நீ பாலமேடு போகும் சவாரிகளை ஏற்றினால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன்' என்று குற்றமுறு கொலைமிரட்டல் விடுத்து,, அவ்வகையில், குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சி இதச, 1860, சட்டப்பிரிவுகள் 342,294(ஆ),323,506(2)இன் கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றங்களை புரிந்துள்ளார் என்பதே ஆகும்.

14. **அரசு தரப்பு தனது வழக்கினை நிரூபிக்க, இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1 சுரேசும் மற்றும் இதர கண்ணுற்ற சாட்சிகளாக அரசுத் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட ப.சா.2 பாலாஜி மற்றும் ப.சா.3 மணிகண்டன் ஆகியோரது சாட்சியங்களையே பிரதானமாக சார்ந்துள்ளது.** இந்நிலையில், வழக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்தபொழுது, இவ்ழக்கில் பாதிக்கப்பட்டவராக அரசுத் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1 சுரேசும், வழக்கு

**குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சியும், தாங்கள் இருவரும் நெருங்கிய உறவினர்கள் என்ற காரணத்தால் ஊர் பிரமுகர்கள் முன்னிலையில் சமரசம்** ஏற்பட்டுவிட்டதால், தாங்கள் வழக்கினை மேல்நடத்த விருப்பமில்லை என்றும், ஆகவே, தங்களுக்குள் ஏற்பட்ட மேற்படி சமரசத்தை அனுமதிக்குமாறு பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் 2023 சட்டப்பிரிவு 359–இன் கீழ் **சமரச மனு** ஒன்றை தாக்கல் செய்ய, இவ்வழக்கு சட்டப்படி சமரசம் செய்யத்தக்கதல்ல என்பதால், மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

15. **விளைவாக,** இவ்வழக்கின் **நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1 சுரேஷ்** தனது சாட்சியத்தில், கடந்த சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பாக மாலை சுமார் 06.00 மணியளவில் **தான் அலங்காநல்லூர் தானி நிலையத்தில் (ஆட்டோ ஸ்டாண்டில்) இருந்தபொழுது, தனக்கும், குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சிக்கும் வாய்தகராறு ஆனது என்றும், வேறு எதுவும் ஆகவில்லை** என்றும், **அ.சா.ஆ.3 புகார் கண்ட அ.சா.ஆ.1 நிகழ்நிலை புகார்தாரர் கையொப்பம் தன்னுடையது என்றும், ஆனால், அதில் என்ன விவரங்கள் கண்டுள்ளது என்பது தனக்கு தெரியாது என்றும், அ.சா.ஆ.2 புகைப்படம்கண்ட தானி (ஆட்டோ) தான் குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சியின் தானி என்றும், தானும், குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சியம் தானி (ஆட்டோ) ஓட்டுநர்கள் என்பதால் தாங்கள் இருவரும் தாங்கள் ஒருவர் மீது மற்றொருவர் கொடுத்த வழக்கில் பரஸ்பரம் சமரசமாகி சமரசமனு தாக்கல் செய்துள்ளதாக** சாட்சியம் அளித்துள்ளார்.

16. மேற்படி அ.சா.1 சுரேசின் சாட்சியத்திலிருந்தும், பாதிக்கப்பட்டவராக அரசுத் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1 சுரேஷ் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சி ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட செய்யப்பட்ட சமரச மனுவிலிருந்தும், மேற்படி இருதரப்பினரும் சமரசமாக சென்றுவிட்டது புலனாவதால், **இதர கண்ணுற்ற**

**சாட்சிகளாக அரசுத் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட ப.சா.2 பாலாஜி மற்றும் ப.சா.3 மணிகண்டன் ஆகியோர் அரசுத் தரப்பில் விசாரிக்கப்படவில்லை; விளைவாக, அரசுத் தரப்பு வழக்கின் பிரதானசார்பானது இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சியாக அரசுத் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1 சுரேசின் சாட்சியத்துடன் சாட்சியம் நிலைபெறுகின்றது.**

17. **குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் பொருத்து அரசுத் தரப்பு வழக்கின் பிரதானசார்பு நிலைபெற்ற இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட கண்ணுற்ற ஒற்றை சாட்சியாக அரசுத் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1 சுரேசின்** சாட்சியத்தை கவனமுற ஆராய்கையில், அன்னாரது தனது **சாட்சியத்தில் தான் எதுவும் வழியடைக்கப்பட்டதாகவோ, ஆபாச வார்த்தை எதுவும் பிரயோகப்படுத்தப்பட்டதாகவோ, அத்தகைய பிரயோகம் எதுவும் பொதுயிடத்தில் நிகழ்ந்ததாகவோ, அத்தகைய பிரயோகம் எதன் காரணமாகவும் தான் தொல்லையுற்றதாகவோ, தான் காயமுற்றதாக அதனை எவரும் தனக்கு தன்னிச்சையாக ஏற்படுத்தியதாகவோ, குற்றமுறு மிரட்டல் எதுவும் விடுக்கப்பட்டதாகவோ, அதன் காரணமாக தானோ, எவரோ ஐயமுற்றதாகவோ எதுவும் ஒரு சிறிதும் சாட்சியம் பிரதிபலிக்காது, வழக்குச் சம்பவத்தை வாய்தகராறுடன் சாட்சியம் நிறைவடைகின்றார்.**

18. அன்னார் அதன் பொருட்டு, அரசுத் தரப்பில் அரசுத் தரப்பு வழக்கினை அனுசரியாத சாட்சியாக கருதப்பட்டு, பாரதிய சாட்சிய சட்டம் 2023 சட்டப்பிரிவு 157–இன் கீழ் இந்நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு, பெறப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளபோதிலும், மேற்படி விசாரணையிலிருந்து அரசுத் தரப்பு வழக்கிற்கு அனுசரணையான பொருண்மைகள் எதுவும் அரசுத் தரப்பில் சாட்சியம் வெளிக்கொணரப்படவில்லை. விளைவாக, **அன்னாரது சாட்சியம் அவரால் சாட்சியம்முன்னிறுத்தப்பட்டவாறே சாட்சியம்நிலைபெற்று,**

**குற்றமுறுத்துப் பொருண்மைகள் எதனையும் தோற்றுவிக்காது, குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சியை அவர் மீது வனையப்பட்ட எக்குற்றச்சாட்டு பொருத்தும் குற்றமுறுத்தாதும் குற்றமுறுத்த உதவாதும் நிறைவுபெற்று நிலைபெறுகின்றது.**

19. **அ.சா.2 சார்பு ஆய்வாளர் மலைச்சாமி இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதற்கட்டபுலன்விசாரணை மேற்கொண்ட பொறுப்பு அலுவலரும், முதற்கட்ட புலன்விசாரணை அதிகாரியுமாகிய ப.சா.9 சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜா முகமது மற்றும் மேற்கட்ட புலன்விசாரணை மேற்கொண்ட மேற்கட்ட புலன்விசாரணை அதிகாரி ப.சா.10 சார்பு ஆய்வாளர் அண்ணாதுரை ஆகியோர் சார்பாக** அரசுத் தரப்பில் அழைக்கப்பட்டு, பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் 2023 சட்டப்பிரிவு 348 இன் கீழ் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட **அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட ஆவணசார் சாட்சியாவார். அன்னாரது சாட்சியமும், அவர் மூலம் காட்சிப்படுத்தப்பட்ட சான்றாவணங்களும், புலன்விசாரணை பொருண்மைகளை மட்டுமே சாட்சியம் பிரதிபலிக்கின்றது. அவை அது பொருத்த உறுதியூட்டும் சான்றுகள் ஆதலால், தனிநிலை சான்றுகளாக அரசுத் தரப்பில் சாட்சியம்முன்னிறுத்தப்பட்ட சான்றாக அரசுத் தரப்பில் சாட்சியம் அளிக்கப்பட்ட, இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சியாக அரசுத் தரப்பில் சாட்சியம் முன்னிறுத்தப்பட்ட இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1 சுரேஷின் சாட்சியமே குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சியை அவர் மீது வனையப்பட்ட எக்குற்றச்சாட்டுகள் பொருத்தும் ஒரு சிறிதும் குற்றமுறுத்தாதும், குற்றமுறுத்த உதவாதும் நிறைவுபெற்று நிலைபெறும் நேர்வில், முதலாமானவை அரசுத் தரப்பு வழக்கிற்கு பயனற்றவையாகின்றது,**

20. **அனைத்திற்கும் அப்பாற்பட்டு,** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் /அ.சா.1 சுரேஷ் அவரது முந்தைய வாக்குமூலமாக அரசுத் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட

அ.சா.ஆ.3 புகாருக்கு முற்றிலும் நேர்முரணாக சாட்சியம்கண்டு, அது கண்ட தனது அ.சா.ஆ.1 நிகழ்நிலை புகார்தாரர் கையொப்பத்தை மட்டும் தன்னுடையதென சாட்சியம் ஏற்றுரைத்து, அதன்மீதான தனது ஆசிரியைடைமையை ஒரு சிறிதும் சாட்சியம் ஏற்றுரைக்காது, மாறாக, அது கண்ட பொருண்மைகள் குறித்த தனது அறிவினையே முழுக்கிடையாக சாட்சியம் மறுதலித்துள்ளநேர்வில், அன்னார் அதனுடன் பாரதிய சாட்சிய சட்டம் 2023 சட்டப்பிரிவு 148–இன் கீழ் எதுவும் சாட்சியம் முரண்படுத்தப்பட்டுள்ளநேர்வில், மேற்படி சாட்சிய முரணிலிருந்து அரசுத் தரப்பு வழக்கிற்கு அனுசரணையான பொருண்மைகள் எதுவும் சாட்சியம் வெளிக்கொணரப்படவில்லை. விளைவாக, **வழக்கின் அடிநாதமா** க **அரசுத் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அ.சா.ஆ.3 புகார் மற்றும் அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்டதாக அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் உண்மைத்தன்மையும், நம்பகத்தன்மையும் அறிவிற்கு ஏற்புடைய ஐயப்பாட்டிற்குரியவையாகியும், அவற்றின் சாட்சிய மதிப்பு அழிந்தொழிந்தும் போகின்றது; மேற்படி சான்றாவணங்களின் மேலெழுந்த மொத்த புலன் விசாரணையும் நீர்த்துப் போகின்றது.**

21. **எனவே, அரசுத் தரப்பு குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சி அவர் மீது வனையப்பட்ட இதச, 1860, சட்டப்பிரிவுகள் 342, 294(ஆ),323 மற்றும் 506(2)–இன் கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றங்களை புரிந்துள்ளார் என்பதை 'அறிவிற்கு ஏற்புடைய ஐயப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கத் தவறிவிட்டது' என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது; விளைவாக, அன்னாரை அவர் மீது வனையப்பட்ட மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் 2023 சட்டப்பிரிவு 271(1)–இன் கீழ் 'குற்றவிடுதலை' செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.**

22. **முடிவாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சியை அவர் மீது வனையப்பட்ட இதச, 1860, சட்டப்பிரிவுகள் 342, 294(ஆ),323 மற்றும் 506(2)இன் கீழ்**

**தண்டிக்கத்தக்கக் குற்றங்கள் பொருத்து அவை 'அறிவிற்கு ஏற்புடைய ஐயப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை' என பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் 2023 சட்டப்பிரிவு 271(1)–இன் கீழ் 'குற்றவிடுதலை' செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.**

23. இவ்வழக்கில் வழக்கு சொத்து எண்.269/2023–இல் கண்ட TN 59 CQ 1752 என்ற பதிவெண் கொண்ட தானி (Auto) இந்நீதிமன்ற குபம.எண்.5313/2023–இல் பிறப்பிக்கப்பட்ட 19.10.2023–ஆம் தேதியிட்ட உத்தரவின்படி மனுதாரர்/ குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சியால் இடைக்கால பராமரிப்பிற்கு பெற்றுக்கொள்ளப்பட்டதை மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீடு இல்லையென உறுதி செய்யப்பட்ட பின்னர் அன்னாரே வைத்துக்கொள்ளவும், அதன் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட பிணையுறுதி ஆவணங்கள் இரத்து செய்யவும் உத்தரவிடப்படுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் அலுவலகக் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய என்னால் பகரப்பட்டது.

CHELLIAH KANDASAMY

Digitally signed by CHELLIAH KANDASAMY
Date: 2025.07.30 19:51:39 +0200

**நீதித்துறை நடுவர்**
**வாடிப்பட்டி.**

**அட்டவணை – I**

**I அரசு தரப்பு சாட்சிகள்**

| **வ.எண்** | **சாட்சிகளின் வரிசை** | **சாட்சிகளின் பெயர்** | **சாட்சியின் முன்நிறுத்தப்பட்ட தன்மை** |
|---|---|---|---|
| 1) | அ.சா.1 | சுரேஷ் | நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சி |
| 2) | அ.சா.2 | மலைசாமி, சார்பு ஆய்வாளர் | பொறுப்பு அலுவலரும், முதற்கட்ட புலன்விசாரணை அதிகாரியுமாகிய ப.சா.9 சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜாமுகமது மற்றும் மேற்கட்ட புலன்விசாரணை அதிகாரி ப.சா.10 |

| | | | |
|---|---|---|---|
| | | | சார்பு ஆய்வாளர் அண்ணாதுரை ஆகியோர் சார்பாக ஆவணசார் சாட்சி. |

**II அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | சான்றாவண எண் | தேதி | சான்றாவணங்களின் பெயர் | தன்மை |
|---|---|---|---|---|
| 1) | அ.சா.ஆ.1 | 17.06.2023 | அ.சா.ஆ.3 புகார் மனு கண்ட அ.சா.1 சுரேசின் நிகழ்நிலை புகார்தாரர் கையொப்பம் | அசல் |
| 2) | அ.சா.ஆ.2 | -- | அ.சா.ஆ.7 படிவம்91-இல்கண்ட வழக்கு சொத்தின் புகைப்படம் | அசல் |
| 3) | அ.சா.ஆ.3 | 17.06.2023 | புகார் மனு | அசல் |
| 4) | அ.சா.ஆ.4 | 17.06.2023 | முதல் தகவல் அறிக்கை | அசல் |
| 5) | அ.சா.ஆ.5 | 17.06.2023 | பார்வை மகஜர் | அசல் |
| 6) | அ.சா.ஆ.6 | 17.06.2023 | மாதிரி வரைபடம் | அசல் |
| 7) | அ.சா.ஆ.7 | 17.07.2023 | படிவம் -91 | அசல் |

**III அரசு தரப்பு சான்று பொருள்:-**

இல்லை

**IV குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி.:-**

இல்லை

**V குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சான்றாவணம் :-**

இல்லை

**VI குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சான்று பொருள்:-**

இல்லை

CHELLIAH KANDASAMY

Digitally signed by CHELLIAH KANDASAMY
Date: 2025.07.30 19:51:44 +0200

**நீதித்துறை நடுவர்,**
**வாடிப்பட்டி.**

**<u>அட்டவணை – II – வழக்கின் சுருக்கம்</u>**

(மாண்புமிகு மதராஸ் உயர்நீதிமன்ற 07.04.2021ஆம் தேதியிட்ட மற்றும் P.DIS எண் 36/2021–இன் கீழ் சுற்றறிக்கை செய்யப்பட்டு 01.05.2021 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட R.O.C. எண் 814/2021/RG/G1–இன் கீழ் அறிவுறுத்தப்பட்ட வழிகாட்டுதலின்படி சேர்க்கப்பட்டது.)

| | | |
|---|---|---|
| 1) | **குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் காவலில் இருந்த நாள்கள்** | குற்றஞ்சாட்டப்பட்டவர் மக்கனாட்சி மாண்புமிகு முதன்மை அமர்வு நீதிமன்ற எதிர்நோக்கு பிணை பெற்றதால் காவலில் இருந்த நாள்கள் என எதுவும் இல்லை. |
| 2) | **இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்ட நாள்** | 15.07.2023 |
| 3) | **இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்** | 31.06.2023 |
| 4) | **பா.கு.பா.ச, 2023 சட்டப்பிரிவு 263–இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரிடம் வினவப்பட்ட நாள்** | 22.01.2025 |
| **5)** | **குற்றப்பல்வகை மனுக்கள் அவை தாக்கல் செய்யப்பட்ட நாள் அதன் மீதான மேல் நடவடிக்கைகள் ஏதும் இருப்பின் அதன் முடிவு** | 1) பா.கு.பா.ச.2023 சட்டப்பிரிவு 359–இன் கீழான குபம.எண்.4869/2025 இன்படியான மனு 29.07.2025 ஆம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேல் நடவடிக்கை எதுவும் இல்லை.<br>2) பா.கு.பா.ச.2023 சட்டப்பிரிவு 348–இன் கீழான குபம.எண்.4885/2025 இன்படியான மனு 29.07.2025 ஆம் தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேல் நடவடிக்கை எதுவும் இல்லை. |
| **6)** | **சாட்சிகளிடம் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்கள்** | |

| **வ. எண்** | **சாட்சிகளின் வரிசை** | **சாட்சிகளின் பெயர்** | **முதல் விசாரணை செய்யப்பட்ட தேதி** | **குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதி** |
|---|---|---|---|---|
| 1) | அ.சா.1 | சுரேஷ் | 29.07.2025 | -- |
| 2) | அ.சா.2 | மலைசாமி, சார்பு ஆய்வாளர் | 29.07.2025 | 29.07.2025 |

| | | |
|---|---|---|
| 7) | **குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான, ஆஜரான மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள்** | குற்றஞ்சாட்டப்பட்டவர் 08.10.2024ஆம் தேதியில் அழைப்பாணையின் பெயரிலும், பின்னிட்டு ஆஜரின்மை காரணமாக பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவை ரத்து செய்து 22.01.2025–ஆம் தேதியிலும் ஆஜராகினார். |
| 8) | **மேல் நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்ட நிறுத்து உத்தரவும் அதன் முடிவும்** | ஏதுமில்லை |

CHELLIAH KANDASAMY

Digitally signed by CHELLIAH KANDASAMY
Date: 2025.07.30 19:51:49 +0200

**நீதித்துறை நடுவர்,**
**வாடிப்பட்டி.**

**குறிப்பு**

1. தீர்ப்புரை பகரப்படும்பொழுது, குற்றஞ்சாட்டப்பட்டவர் முன்பிணையில் உள்ளார்.
2. தீர்ப்புரையின் துண்டறிக்கை காவல்துறையினருக்கு தரப்பட்டது.
3. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. குற்றஞ்சாட்டப்பட்டவர் பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் 2023 சட்டப்பிரிவு 271(1)–இன் கீழ் 'குற்ற விடுதலை' செய்யப்பட்டார்;
5. தீர்ப்புரையின் நகல் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், மதுரை அவர்கள் முன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

**<u>தீர்ப்புரை</u>**
[CNR No. TNMDIE-006537-2023]
**பவஎண்.533/2023**
**நாள் :30.07.2025**